நேரத்திலே குறுவை நெல்லை வாங்குவதைவிட, வட மாநிலங்களிலே வாங்குவதுதான் உசிதம், அதுதான் சிறந்தது என்ற யோசனையின் அடிப்படையிலேதான் அப்பொழுது வட மாநிலத்திலேயிருந்து வாங்கியது. என்றாலும், தொடர்ந்து வெளியிலிருந்து வாங்கும் யோசனை இந்த அரசாங்கத்திடம் இல்லை. இப்பொழுது வட மாநிலங்களிலிருந்து அரிசி வாங்குவதை இந்த அரசாங்கம் நிறுத்தியுள்ளது இப்பொழுது. நம்முடைய விவசாயிகளிடமிருந்து அரசு வாங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மதுரையில் சாலை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு.

*370 வினு— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை 45-வது வார்டு அனுப்பானடி புதுத்தெரு ரோடு புறம்போக்கு இடத்தை ஒரு சிலர் ஆக்கிரமித்து கட்டிடம் கட்ட ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; (அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டது.

பேர்ணும்பட்டு ஏரி.

*371 வினு— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் பேர்ணும்பட்டிலுள்ள ஏரி மண் மேடிட்டு தண்ணீர் தேங்க முடியாத நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை தூர் எடுத்து ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) இந்த ஏரி பேர்ணும்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்புக்கு உட்பட்டது. இந்த ஏரியின் தூர் வாரும் வேலையை அந்த ஊராட்சி ஒன்றியமே மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்துள்ளது.